வரவேண்டிய தொகை இதுவரையில் 7 லட்சத்து 30 ஆயிரத்து 766 ரூபாய். அதற்கான கடிதமும், நினைவூட்டுக் கடிதங்களும் அந்தக் கட்சிக்கு அரசின் சார்பாக தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

(9-10 மணி)

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்ததற்காக ஆகியிருக்கின்ற செலவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது போன்று வேறு எந்த நாட்டிலாவது இப்படிப்பட்ட . . . . (மணியடிக்கப்பெற்றது.)

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவு.

*7036. **திரு. செங்கை சிவம்** :

திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறு நீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

(ஆ) செலவிடப்பட்ட தொகை திருப்பி அரசுக்கு செலுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவிட்ட தொகை ரூ. 1,63,25,560.42.

(ஆ) இதில், ரூ. 1,02,89,897.05-ஐ அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசிற்குத் திரும்பி செலுத்தி விட்டது. திருப்பிச் செலுத்தப்படாத தொகை சுமார் ரூ. 61 இலட்சம். அது செலுத்தப்படவேண்டியதில்லைஎன 8-11-1984-ல் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அந்தச் செலவை அரசே ஏற்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் எத்தனை முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றார்? எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார்? அப்படி முதல் முறையாக அவர் சென்றபோது யார் யார் அவருடன் சென்றார்கள் என்ற விவரத்தை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1990, சனவரி 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் 4 முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடுசென்றார். முதல் தடவை அவரோடு சென்றவர்கள் 29 பேர்; இரண்டாவது முறை உடன் சென்றவர்கள் 12 பேர்; மூன்றாவது முறை 8 பேர் ; நான்காவது முறை 12 பேர்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருக்கிறார்களா ? அவர்களுடன் சென்றவர்கள் யார் ? யார் ? அந்தச் செலவை அவர்களுடைய கட்சி திருப்பிச்செலுத்தி விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்றபோது ரூ. 1,33,522 செலவாயிற்று. அதை திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பிச் செலுத்திவிட்டது. ஆனால் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்ட உடல்நிலை வேறுவிதமானது. அது அபாயகரமானது என்ற காரணத்தினால் அவர் நான்கு முறை வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது.

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியவர்களுக்கு பட்டா வழங்குதல்.

*94 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. க. சுந்தரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு பட்டா இல்லை என்ற ஆணையை மாற்றி பட்டா வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.